தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 10 திகதி: 13.06.15

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்:

______________________________

1. கீழே உள்ள பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக. (20 புள்ளிகள்)

இன அடையாளம் என்பது எம் எல்லோருக்கும் முக்கியமானது. இன்று புலம்பெயர்ந்து வாழும் சூழலில் எமது இன, மொழி அடையாளங்கள் தான் நாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு அவசியமானதாகும். நமது தமிழ் மொழி மிகநீண்ட வரலாற்றையும் இலக்கியச் செழுமையையும் கொண்ட பெருமைமிக்க மொழி. செம்மொழி அந்தஸ்த்தையும் பெற்று சிறப்புற்று நிற்கும் மொழி. எமது மொழியின் தொன்மைச் சிறப்பையும் பெருமையையும் நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதும் பெருமை கொள்ள வேண்டியதும் தமிழைக் கற்றுப் பேண வேண்டியதும் வளர்த்துக் காக்க வேண்டியதும் நமது தலையாய கடமை. தமிழர்கள் தாம் ஒரு காலத்தில் நினைத்தேயிராத நாடுகளில் இன்று குடியேறி, ஒரு காலத்தில் பேசுவோம் என்று கற்பனை பண்ணியிராத மொழிகளை இன்று பேசுகிறார்கள். ஜேர்மன், பிரெஞ்சு, ரஷ்ய, சுவீடிஷ், நோர்வேஜிய, போர்த்துக்கேய, டச்சு மொழிகள் என்று பலமொழிகளைப் பேசி அந்தந்த நாடுகளில் வாழ்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் உறவினர்களும் நண்பர்களும் தமக்குள் உறவாட உதவும் மொழி தமிழே. அடுத்தடுத்த சந்ததியினர் தமிழை மறந்தால் பல நாடுகளில் சிதறி வாழும் உறவினர்களும் நண்பர்களும் ஒருவரோடு ஒருவர் என்ன மொழியில் பேசமுடியும்? ஆங்கிலம் எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப் படுவதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதைவிட மொழியியலாளர் பலரும் வற்புறுத்திக் கூறும் உண்மை என்ன தெரியுமா? நீங்கள் மொழியை இழந்தால் பின்னர் உங்கள் பண்பாட்டை இலகுவாக இழந்து விடுவீர்கள் என்பதே. பிள்ளைகள் தமது தாய்மொழியைப் பேச உதவுங்கள். அதற்கு நேரம் ஒதுக்குங்கள் என்கிறார்கள். எமது மொழியை அதிகம் பயன்படுத்தாது விட்டால் அது விரைவில் மறந்து போய் விடும் என்றும் பிற்காலத்தில் அது அவர்களை கவலையில் ஆழ்த்தும் என்றும் கூறுகிறார்கள்.

ஆங்கிலத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குத் தமது தாய்மொழியை அறிந்திருப்பது மேலதிகமாகச் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்குமே தவிர எவ்விதக் குழப்பத்தையும் ஏற்படுத்தாது. தாய்மொழி என்பது நாம் நினைப்பதை விட மிகப் பெறுமதி வாய்ந்தது. அதனைப் பணப்பெறுமதியுடனோ தொழில் தகைமையுடனோ இணைத்துப் பார்ப்பது சற்றும் பொருத்தமற்ற தொன்றாகும். ஒருவரின் அடையாளத்தில் மொழி என்பது முக்கியமானது என்பதை நாம் மறக்கவோ, மறைக்கவோ, மறுக்கவோ முடியாது என்று கூறலாம்.

புலம் பெயர்ந்த தமிழர் தமிழைக் கற்பதும் பேணுவதும் வளர்ப்பதும் முக்கியம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்வோம்

1. இந்த உரைப்பகுதியில் கூறப்பட்ட பிரதான கருத்து என்ன?

……………………………………………………………………………………………………...

2. எமது மொழிபற்றி இங்கு சொல்லப்பட்ட முக்கிய சிறப்பம்சங்கள் தருக

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

3. இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் எவ்வெவ் மொழிகளையெல்லாம் பேசுகிறாாகள்?

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

4. புலம் பெயர்ந்து வாழும் நாம் நமது மொழியை அறிந்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

5. மொழியியலாளர்கள் மொழிபற்றி என்ன கருத்தை தெரிவித்துள்ளார்கள்?

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

6. நமது எதிர்காலச் சந்ததியினர் எதிர்கொள்ளக் கூடிய சிக்கல்கள் என்ன என்று நினைக்கிறீர்கள்? அவற்றை எவ்வகையில் தீர்த்துக் கொள்ளலாம் என்று உங்கள் கருத்தை எழுதுக.

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

2. கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கீறிட்ட இடங்களை நிரப்புக (20 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| வழிகளில் | செவிப்புலன் | பணியாற்றவேண்டும் | தொடர்பு |
| கட்புல | நாட்டு | நடப்புகளையும் | பிரபலமான |
| செவிப்புல | கவிதைகள் | அறிவுப்பசிக்குத் | இணையம் |
| கட்டுரைகள் | விருந்தளிக்கும் | பண்பாடு | மேலாக |
| தகவல்களைப் | அனைவராலும் | ஒரே வலைப்பின்னலில் | நிகழ்ச்சிகளையும் |
| கல்வி வளர்ச்சிக்கு | | | |

இன்றைய உலகில் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

சாதனங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி . . . . . . . . . .

. . . . என்பன பெரிதும் பயன்படுகின்றன. பத்திரிகைகள் நாள்தோறும் . . . . . . . .

. . . . . . . . உலகச் செய்திகளையும் நமக்குத் தருகின்றன. செய்திகள் மட்டுமன்றி . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .. . . . சிறுகதைகள்,

துணுக்குகள், சித்திரங்கள் முதலியனவும் வெளியாகின்றன. இவை நமது . . . . . . . . .

. . . . . . . . . . . . .தீனியாகின்றன.

வானொலி எல்லோராலும் அதாவது எழுதப்படிக்கத் தெரிந்தவர் முதல் எழுதப்படிக்கத் தெரியாதவர் வரை . . . . . . . . . . . . . . . . . . . . . . விரும்பப்படும் அறிவுச் சாதனமாகும்.

மாணவர்களின் . . . . . . . . . . . . . . . . . . . . உதவும் வகையில் கல்வி ஒலிபரப்பு

. . . . . . . . . . . . . . . . . . . .நடத்துகின்றன. தொலைக்காட்சி . . . . . . . . . . . . . . .

வெகுசனத் தொடர்பு சாதனமாக விளங்குகிறது. இது கட்புலன் . . . . . . . . . . . . . . . .

. இரண்டுக்கும் . . . . . . . . . . . . . . . . இவை எல்லாவற்றிற்கும் . . . . . . . . . . . . .

. இணையம் உலகம் முழுவதையும் . . . . . . . . . . . . . . . .இணைத்து வைத்துள்ளது.

இன்று ஒருவரோடொருவர் . . . . . . . . . . . . . . கொள்ளவும் . . . . . . . . . . . . . . . . . . .

பரிமாறவும் இணையம் பலவழிகளைக் கையாள்கின்றது. கல்வி கலாசாரம் . . . . . . . . . . . .

. ஆகியவற்றைப் பேணத்தக்க . . . . . . . . . . . . . . . . . வெகுசனத் தொடர்புச் சாதனங்கள்

. . . . . . . . . . . . .

3. உங்கள் பிரதேசத்தில் நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனக்கோரி உங்கள் பகுதி நகராட்சி மன்றத் தலைவருக்கு 125 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.(15 புள்ளிகள்)

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

4. அமெரிக்காவில் சில மாநிலங்களிலும் சில தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் மரண தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. கொலைக்குற்றம் மற்றும் பாரிய குற்றங்களுக்கு மரண தண்டனை தீர்வாகுமா? இந்த நூற்றாண்டில் மரண தண்டனை நடைமுறைப் படுத்தப்படுவது பொருத்தமாகுமா? உங்கள் கருத்தைத் தொகுத்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக (10 புள்ளிகள்)

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

5. **பின்வரும் ஏதாயினும் ஒரு தலைப்பில் 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக** (25 புள்ளிகள்)

நீர் அண்மையில் தமிழ்பேசும் நாடொன்றில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்துள்ளீர். ஊமது சுற்றுலாவை பாடசாலைக் கலைவிழா மலரில் பிரசுரிப்பதற்கு சுற்றுலா என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

அல்லது

அண்மையில் உமது கல்வி நிலையக் கலைவிழாவில் பார்த்த நாடகம் ஒன்றைப்பற்றி விமர்சனம் எழுதுக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

6. கேட்டுக்கிரகித்தல்

ஒலிநாடாவினைக் கேட்டுக் வினாக்களுக்கு விடை எழுதுக. (10 புள்ளிகள்)

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................